# அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்று மதிப்பீட்டில; A+ (CGPA:3.64) தகுதி பெற்றது)

**காரைக்குடி – 630 003**

நாள்: 25.03.2019

காரைக்குடி, அழகப்பா பல்கலைக்கழகத்தின் ஆங்கிலம் மற்றும் அயல்மொழிகள் துறையில் உலகக் கவிதைகள் தின விழா மார்ச் 21ம் தேதி (வியாழக்கிழமை) கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினர்களாக திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக முன்னாள் ஆங்கிலத்துறைத் தலைவர் திரு. யு.நோயல் ஜோசப் இருதயராஜும், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறை தலைவர் திரு.டு.முத்துவீரப்பன் அவர்களும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

விழாவில் தலைமையுரை ஆற்றிய அழகப்பா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேரா.நா. இராஜேந்திரன் அவர்கள் கவிதைகளின் முக்கியத்துவத்தையும், மாணவர்கள் கவிதைகள் எழுதக்கூடிய படைப்பாற்றலை மேம்படுத்திக்கொள்வதின் அவசியத்தையும் தன்னுடைய உரையிலட குறிப்பிட்டார். சுதந்திரப்போராட்டக் காலத்தில் கவிதை என்பது மிக கூர்மையான ஆயுதமாக பாரதியார் போன்றவர்களால் பயன்படுத்தப்பட்டு மக்கள் மத்தியில் சுதந்திரத்தைப்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது என்றும் விளக்கினார்.



சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட பேராசிரியர் நோயல் அவர்கள் கவிதைகளை எப்படி வாசிக்கவேண்டும் எப்படி திறனாய்வு செய்யவேண்டும் என்பது பற்றி அமெரிக்கக் கவிஞர் வாலாஸ் ஸ்டீவன்ஸ் படைப்பையும் இங்கிலாந்துக்கவிஞர் வில்லியம் பட்லர் யேட்ஸ் படைப்பையும் மையமாக வைத்து விவரித்தார்கள். மேலும் கவிதை என்பது புதுமையானதாகவும் அதே நேரத்தில் சிறப்பான பழமைக்கூறுகளை உள்ளடக்கியதாகவும் இருக்க வேண்டும் என்றும் விவரித்தார். மற்றொரு சிறப்பு விருந்தினரான அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத்தலைவர் முத்துவீரப்பன் கவிதை என்பது மானுட வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது ஆனால் அதே நேரத்தில் கவிதை மானுட வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதாகவும், சீர்படுத்துவதாகவும் அமையவேண்டும் என்று கூறினார். சங்ககால இலக்கியத்திலிருந்தும் தற்கால இலக்கியத்திலிருந்தும் பல்வேறு கவிதைகளை மேற்கோள்காட்டி தன் உரையை நிகழ்த்தினார். தமிழில் புதுக்கவிதையின் வளர்ச்சியைக் குறிப்பிட்டு பேசும்பொழுது, அதன் வளர்ச்சியையும், பரிமாணத்தையும் ஏழு கட்டங்களாக பிரித்து விளக்கினார்.

முன்னதாக வரவேற்புரை நிகழ்த்திய ஆங்கிலத்துறைத்தலைவர் (பொ) பொ. மதன் ஆங்கிலக்கவிதைகளின் வரலாற்றை எடுத்துரைத்தார். நிறைவாக உதவிப்பேராசிரியர் மு. நடராசன் நன்றி கூறினார்

பேரா.ஹா.குருமல்லேஷ் பிரபு
பதிவாளர்